மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
O.S.NO. 107/2013

19.11.2018

குறுக்கு விசாரணை தொடர்ச்சி
வா.சா. 2 – காளியம்மாள், க/பெ. பழனிச்சாமி

இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதையும் நான் படித்துப் பார்த்திருக்கிறேனா என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. படித்துப் பார்க்கவில்லை. அது என்ன பத்திரம் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பத்திரங்கள் எல்லாம் எனது மகன் மற்றும் மகள் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். யார் யார் யாருக்கு எந்த சமயத்தில் எழுதிக் கொடுத்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கருப்பகவுண்டர் பூமிகளை விற்றுவிட்டாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் வேறு யாரையாவது சாட்சியாக விசாரிக்க விரும்புகிறேனா என்றால் இல்லை. பெரிய மாரப்ப கவுண்டருக்கு எந்த பெண் வாரிசும் இல்லை என்றாலும் அவருக்கு வாரிசாக நானும், மசாத்தாளும் பொய்யாக வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எல்லாம் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கும் தாவா சொத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்றாலும் பிரதிவாதிகளுக்கு எதிராக யாரோ எங்களை தூண்டிவிட்டதால்தான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரில்தான் பட்டா, சிட்டா, கந்தாய இரசீது, வீட்டு வரி இரசீது எல்லாம் மாறியிருக்கிறது என்றால் எங்கள் பெயரில்தான் இருக்கிறது. அவர்கள் பெயரில் இல்லை. எங்கள் பெயரில் உள்ள பட்டா, சிட்டா, கந்தாய இரசீது, வீட்டு வரி இரசீது ஆகியவற்றை வழக்கு போடும்போதோ அல்லது தற்போதோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் தாக்கல் செய்திருக்கிறோம். தாவா சொத்து யார் பெயரில் இருக்கிறது என்றால் மாரப்ப கவுண்டர் பெயரில்தான் இருக்கிறது. இன்னும் எங்கள் பெயருக்கு மாற்றவில்லை. இந்த வழக்கில் நாங்கள் வம்சவிருட்சம் எதுவும் தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் ஒண்டிப்புதூரில்தான் இருந்துகொண்டிருக்கிறோம் என்றாலும் நாங்கள் எப்போதுமே தாவா பூமிக்கு வந்ததில்லை என்றால் சரியல்ல. நான் திருமணமானதிலிருந்து ஒண்டிப்புதூரில்தான் இருந்துவருகிறேன் என்றாலும் தாவா பூமிக்கு வந்ததில்லை என்றாலும் சரியல்ல. கருப்பகவுண்டர் தான் பெரிய மாரப்ப கவுண்டரின் கருமாதி போன்ற காரியங்களைச் செய்தார்

Sd/-காளியம்மாள்

என்றால் சரியல்ல. நாங்கள் தான் செய்தோம். தாவா பூமியை பிரதிவாதிகள் தான் நலப்படுத்தி நல்ல முறையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நாங்கள்தான் விதைத்து வைத்துக்கொண்டிருக்கிறோம். எங்களிடம் மாடு, கலப்பை இருக்கிறதா என்றால் இல்லை. நான் தாவா பூமிக்கு வந்து போவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கருப்பக்கவுண்டரின் வகையறாதான் வெகுகாலமாக அனுபவித்து வருவதால் அவர்களுக்கு அனுபவ பாத்தியதை ஏற்பட்டு விட்டது என்றால் சரியல்ல. நாங்கள்தான் போய் வந்துகொண்டிருக்கிறோம். நாங்கள் போட்டுள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

Sd/-காளியம்மாள்

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-S.Indulatha,19.11.18
மாவட்ட உரிமையியல் நீதிபதி
பல்லடம்